# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2037/23 - 2017 සැප්තැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2017.09.22

*2037/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 24/51* (iv)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

போக்குவரத்து மற்றும்
*சிவில் விமான சேவைகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2017, செத்தெம்பர் 21.*

ஒழுங்குவிதிகள்

*2017, செத்தெம்பர் மாதம் 8 ஆந் திகதிய 2035/51 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கர வண்டி) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-*

*(1)* அதன் I ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவதனை பதிலிடுக :-

*"1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கர வண்டி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்." ;*

*(2)* அதன் *2(1)* ஆம் ஒழுங்குவிதியில், "வாடகைக்கு அல்லது வேறு வகையில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாடகைக்கு அல்லது வேறு வகையில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

*(3)* அதன் *3 (அ)* ஆம் ஒழுங்குவிதியின், "குறைந்தபட்சம் *382* மில்லி மீற்றர் மற்றும் *250* மில்லி மீற்றர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "குறைந்தபட்சம் *382* மில்லி மீற்றர் மற்றும் *250* மில்லி மீற்றர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*10- 207*


1A-PG 3702 - 507 (2017/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.